**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், காட்பாடி**
**முன்னிலை – திரு. S.K.P. திலிப்பாபு, M.A., M.L.,**

**நீதிமன்ற நடுவர், காட்பாடி**

**2026–ம் ஆண்டு ஜூலை மாதம் 02–ம் நாள் வியாழக்கிழமை**

**CC.No. 11/2025**

**CNR.NO. TNVL – 24–000078–2025**

அரசுக்காக,
காவல் ஆய்வாளர்,
திருவலம் காவல் நிலையம்,
குற்ற எண்.240/2024,
U/s. 281, 106(1) BNS

……குற்றமுறையிடுபவர்

//எதிராக//

சந்தர், த/பெ. தனபால்
நெ.65(2), மலைச்சந்து கிராமம்,
கெங்கநல்லூர் அஞ்சல்,
அணைக்கட்டுவழி, வேலூர் தாலுக்கா
வேலூர் மாவட்டம்.

……..குற்றஞ்சாட்டப்பட்ட நபர்

| Sl. No. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண் | எதிரியின் விவரங்கள் | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | பெயர் | தந்தையின்/ கணவர் பெயர் | தொழில் | இருப்பிடம் | வயது |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1 | திருவலம் காவல் நிலையம், குற்ற எண்.240/2024, U/s. 281, 106(1) BNS | சந்தர் | தனபால் | -- | நெ.65(2), மலைச்சந்து கிராமம், கெங்கநல்லூர் அஞ்சல், அணைக்கட்டுவழி, வேலூர் தாலுக்கா, வேலூர் மாவட்டம். | 50 |

S K P DILIP BABU Digitally signed by S K P DILIP BABU

நீதித்துறை நடுவர்,
காட்பாடி.

| Date of | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நிகழ்வு நாள் | புகார் கொடுத்த நாள் | எதிரியை கைது செய்த நாள் | எதிரியை பிணையில் விடுவித்த நாள் | சிறைக்கு அனுப்பி வைத்த நாள் | வழக்கு விசாரணை ஆரம்ப நாள் | வழக்குவிசாரணை முடிந்த நாள் | தண்டனை உத்தரவு | குற்றவாளிகள் மீதான தீர்ப்புரைக்குரிய தீர்வு முடிவின் நகலை ஒப்படைத்தல் | காலதாழ்விற்குரிய காரணம் |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 12.07.24 | 13.07.24 | -- | -- | -- | 16.05.2025 | 18.06.26 | 02.07.26 | -- | No Delay |

இவ்வழக்கு கடந்த 10.01.2025 ம் தேதி அன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு குற்றம் தொடுப்பவர் தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை–1 அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. K.குமார், R.நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் என்பவர் முன்னிலையிலும் தரப்பினர்களைக் கேட்ட பின்னர் ஆவணங்கள் அனைத்தையும் பார்வையிட்டு பரிசீலனை செய்து இன்று இம்மன்றம் வழங்கும்.

## <u>தீர்ப்புரை</u>

1. கடந்த 12.07.2024 ஆம் தேதி மாலை 06.30 மணியளவில் திருவலம் காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட காட்பாடி– வள்ளிமலை ரோடு, கண்டிப்பபேடு மேட்டு காலனி அருகில் உள்ள கிரானைட் கம்பெனி எதிரில் வாதியின் மனைவி திருமதி, லட்சுமி மேற்படி சாலையை குறுக்காக தெற்கிலிருந்து வடக்காக நடந்து கடக்கும் போது, மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி TN 23 N 2233 பதிவு எண் கொண்ட அரசு பேருந்தை இக்குற்ற அறிக்கையில் குறிப்பிட்டுள்ள எதிரியாகிய நீவிர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து லட்சுமி மீது மோதி விபத்து ஏற்படுத்தியதாகவும், விபத்தில் லட்சுமிக்கு தலையில் பின்புறம் பலத்த இரத்த காயமும், வலது கன்னத்தில் காயமும் ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே இறப்பை ஏற்படுத்தியது தொடர்பாக எதிரியாகிய உம்மீது பிரிவு 281, 106(1) BNS படி குற்றம் எனவும், எனவே எதிரி மீது 281, 106(1) BNS ன் கீழ் கண்டிக்கதக்கதும், இந்நீதிமன்றத்தால் விசாரணை செய்யத்தக்கதுமான குற்றமொன்றை புரிந்துள்ளீர்கள். எனவே எதிரி மீது பிரிவுகள் 281, 106(1) BNS – ன் படி திருவலம் காவல் ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. இவ்வழக்கில் எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் குற்றமுறையிடுபவர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட

ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் எதிரிக்கு கு.வி.மு.ச. பிரிவு 207 ன் கீழ் இலவசமாக வழங்கி அவைகளை பரிசீலனை செய்து பார்க்க தகுந்த சந்தர்ப்பமும் வாய்ப்பும் அளித்து எதிரி மீதான குற்றங்கள் பற்றி வினவியபோது எதிரி குற்றத்தை மறுத்தார். மேலும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும் வழக்காவணங்களை பரிசீலனை செய்தும் வழக்கிற்கான முகாந்திரம் உள்ளதால் எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 281, 106(1) BNS ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனைந்து விளக்கிக் கூறி வினவியபோதும் எதிரி தான் குற்றவாளி இல்லை என்று கூறினார்.

**3.** எதிரி குற்றத்தை மறுத்துரைத்ததால் எதிரி மீதான குற்றச்சாட்டுக்களை நிரூபணம் செய்யும் பொருட்டு அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டன.

**4.அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் மற்றும் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம்**

அ.சா.1 சுந்தரமூர்த்தி இந்நீதிமன்றத்தில் தோன்றி அளித்த சாட்சியத்தில், தான் தற்போது காட்பாடியில் வசித்து வருகிறேன். வயது மூப்பின் காரணமாக வேலை ஏதும் செய்யவில்லை. விபத்தில் இறந்து போன லட்சுமி தனது மனைவி. தன் மனைவி மாலை நேரத்தில் வழக்கமாக கடைக்காக சென்று வருவது

வழக்கம். 12.07.2024 ம் தேதி மாலை 6.30 மணியளவில் தன் மனைவி கடைக்கு சென்றார். கிராணைட் கம்பெனி அருகே கண்டிபேடு என்ற இடத்தில் வரும்போது ஓரமாக அரசு பேருந்து தன் மனைவி மீது ரோட்டை கடந்து வரும்போது தடம் எண் 20 மோதியதாக தனது ஊரை சேர்ந்த தனது மகன் அசோகன் என்பவருக்கு தகவல் சொல்லி தன் மகன் தனக்கு தகவல் சொன்னார். சம்பவ இடத்திற்கு தானும் தனது மகனும் சென்று பார்த்தோம். தன் மனைவிக்கு காதில் இரத்தம் வழிந்து கொண்டிருந்தது. இறந்த நிலையில் காணப்பட்டார் சுய நினைவு இல்லை. வலது பக்க காது ஓரம் அடிப்பட்டு இரத்தம் வழிந்துகொண்டிருந்தது. கன்னத்தில் சிராய்ப்பு காயம் காணப்பட்டது. பின்னர் தன் மனைவி மீட்டு ஆம்புலன்ஸ் மூலமாக வேலூர் அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அங்கிருந்த மருத்துவர்கள் பரிசோதித்து விட்டு தனது மனைவி ஏற்கனவே இறந்து விட்டதாக தகவல் சொன்னார்கள். சம்பவம் தொடர்பாக தான் சொல்ல சொல்ல தனது அக்கா மகன் புகார் எழுதினார். தன்னிடம் காட்டப்படும் புகார் மனு தன்னுடையது தான். அது அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. விபத்தை அணைக்கட்டை சேர்ந்த சுந்தர் என்ற டிரைவர் ஏற்படுத்தியதாக தெரிந்து கொண்டேன். போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.2 அசோகன் இந்நீதிமன்றத்தில் தோன்றி அளித்த சாட்சியத்தில், தான் தற்போது காட்பாடியில் வசித்து வருகிறேன். தனியார் காவலராக வேலை ஏதும் செய்யவில்லை. விபத்தில் இறந்து போன லட்சுமி தனது அம்மா. 12.07.2024 ம் தேதி தான் தன் வீட்டில் இருந்தபோது தங்கள் ஊரை சேர்ந்த மனோகர் என்பவரின் மகன் போன் மூலமாக தனது அம்மாவிற்கு 20 நம்பர் பேருந்து மோதி விபத்து நடந்ததாக தகவல் சொன்னார். சம்பவ இடம் கிரானைட் கம்பெனி அமைந்துள்ள கண்டிபேடு இடமாகும். சம்பவ இடத்திற்கு தானும் தனது தந்தை சுந்தரமூர்த்தியும் பார்த்தோம். தன் அம்மாவை சென்று பார்த்தபோது வலதுபக்க நெற்றியிலும், முகத்திலும், அடிப்பட்டு இருந்தது. இறந்த நிலையில் காணப்பட்டார். தனது அம்மாவை ஆம்புலன்ஸ் மூலமாக வேலூர் அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். மருத்துவர்கள் பரிசோதித்து விட்டு தனது அம்மா இறந்துவிட்டதாக தகவல் சொன்னார்கள். சம்பவம் தொடர்பாக நடவடிக்கை எடுக்க தனது அப்பா புகார் கொடுத்தார். போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.3 மகேஷ் இந்நீதிமன்றத்தில் தோன்றி அளித்த சாட்சியத்தில், தான் தற்போது கண்டிபேடில் வசித்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். வழக்கு பற்றி தனக்கு ஏதும் தெரியாது என்றும், போலிசார் தன்னை விசாரிக்கவில்லை

என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.4 ரமேஷ் இந்நீதிமன்றத்தில் தோன்றி அளித்த சாட்சியத்தில், தான் தற்போது கம்மவார்புதூரில் வசித்து வருகிறேன். எலெக்ட்ரிசீனியாக வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்து போன லட்சுமி என்பவரை தெரியும். கடந்த 12.07.2024 ம் தேதி 6.25 மணிக்கு சேர்க்காடு கூட்டுரோடு செல்வதற்காக வளைவு அருகே செல்லும் போது அரசு கிரணைட் கம்பெனி பேருந்து மோதி விபத்து ஏற்பட்டது. சென்று பார்த்த போது லட்சுமி என்பவருக்கு தலையில் காயம் ஏற்பட்டு இருந்தது. அந்த பேருந்து வேலூர் முதல் பொன்னை செல்ல கூடிய 20R ஆகும். விபத்து ஏற்பட்டவுடன் பேருந்தின் ஓட்டுநர் இறங்கி வந்து அந்த லட்சுமி என்பவரை பார்த்தார். அந்த ஓட்டுநர் நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ளார். பின்னர் லட்சுமி என்பவரை ஆம்புலன்ஸில் ஏத்தி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.5 ரஞ்சித்குமார் இந்நீதிமன்றத்தில் தோன்றி அளித்த சாட்சியத்தில், தான் தற்போது காட்பாடியில் வசித்து வருகிறேன். தான் BCA வரை படித்துள்ளேன். தனியார் துறையில் வேலை செய்து வருகிறேன். தற்போது தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் முதலாவது கையொப்பம் தன்னுடையது தான். அந்த கையொப்பத்தை அரசு பேருந்து மோதி விபத்து ஏற்பட்ட வழக்கு

சம்மந்தமாக 13.07.2024ம் தேதி கண்டிப்பேடு கம்மவார் புதூர் என்ற இடத்தில் வைத்து செய்து கொடுத்தேன். தன்னுடன் சசி என்பவரும் கையொப்பம் செய்தார். போலிசார் சம்பவ இடத்தில் மார்க் செய்து வைத்திருந்தார்கள். போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.6 பாலவெங்கட்ராமன் இந்நீதிமன்றத்தில் தோன்றி அளித்த சாட்சியத்தில், தான் தற்போது வேலூர் கிராமிய காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்பாக கடந்த 13.07.2024 ம் தேதி காலை 09.00 மணிக்கு திருவலம் உதவி ஆய்வாளர் ஆகிய தான் நிலைய பொறுப்பில் இருந்தபோது காட்பாடி தாலுக்கா, ராஜாஜி நகரைச் சேர்ந்த ராஜகிளி மகன் சுந்தரமூர்த்தி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைபடி நிலைய குற்ற எண் 240/2024, சட்டப்பிரிவுகள் 281, 106(1) BNS ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், பின்னர் முதல் தகவல் அறிக்கையும், புகார் மனுவையும் இணைத்து கனம் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அனுப்பி வைத்தேன். பின்னர் ஒரு நகலை தன்னுடைய விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சம்பவம் இடம் சென்று சாட்சிகள் ரஞ்சித்குமார் மற்றும் சசிந்திரன் ஆகியோர் முன்னிலையில்

சம்பவம் இடம் மற்றும் சுற்றுப்புறத்தையும் பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்தேன். அது முறையே அ.சா.ஆ.4 மற்றும் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், பின்னர் வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனை சென்று வழக்கில் இறந்து போன லட்சுமி என்பவரின் பிரேதத்தின் மீதான பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். அந்த பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், பின்னர் சாட்சிகள் சுந்தரமூர்த்தி, அசோகன், பாண்டியன், ராஜ்குமார், குமார், மகேஷ், ரமேஷ், ரஞ்சித்குமார், சசிந்திரன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் விபத்தில் இறந்து போன லட்சுமி என்பவரின் உடலை உடற்கூராய்வு செய்ய தலைமை காவலர் செந்தில்குமார் என்பவரின் மூலம் வேண்டுகோள் கடிதம் அனுப்பி வைத்தேன். பின்னர் விபத்தில் இறந்து போன லட்சுமி என்பவரின் உடலை வேலூர் அடுக்கம்பாறை மருத்துவமனையில் வைத்து விரேத பரிசோதனை செய்தேன். பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் கலைச்செல்வி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து உடற்கூராய்வு சான்றிதழ் பெற்றேன். அந்த உடற்கூறாய்வு சான்றிதழ் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், பின்னர் விபத்து ஏற்படுத்திய அரசு பேருந்து (பதிவெண் TN23 N2233) கொண்ட

பேருந்தை மோட்டார் வாகன ஆய்வுக்கு உட்படுத்தி விபத்து ஆய்வறிக்கை பெற்றேன். அந்த மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் தான் பணிமாறுதல் ஆகி சென்றதால் வழக்கு கோப்பை நிலையம் வைத்து சென்றேன். பின்னர் வழக்கு கோப்பை காவல் ஆய்வாளர் திரு ஆனந்தன் என்பவர் தன்னுடைய புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு பட்டியல் சாட்சிகள் 1 முதல் 12 வரை விசாரணை செய்ததில் தன்னிடம் கூறியதையே ஆய்வாளரிடம் சொன்னதால் அவர் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. பின்னர் வழக்கின் எதிரி சந்தர் என்பவர் நிலையம் ஆஜரானவரை காரணம் கூறி கைது செய்து தக்க இருநபர் ஜாமீனில் பிணையில் விடுவித்தார். பின்னர் வழக்கின் விசாரணை முடித்து எதிரி மீது சட்டப்பிரிவுகள் 281, 106(1) BNS ன் படி 16.12.2024 அன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

5). இவ்வழக்கில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து எதிரிக்கு பாதகமானவற்றைத் தொகுத்து எதிரியிடம் கு.வி.மு.ச. பிரிவு 313(1)(பி)ன் படி வினவியபோது எதிரி அவைகளை மறுத்து பொய் வழக்கு என்று கூறினார். எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறியதால் எதிரி தரப்பு சாட்சியம் முடித்துக்கொள்ளப்பட்டது.

**6. கற்றறிந்த  அரசு தரப்பு வழக்கறிஞரின் வாதம்**

அரசு தரப்பில் ஆஜரான கற்றறிந்த அரசுத்தரப்பு வழக்கறிஞர் தன்னுடைய வாதத்தின்போது அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களின் மூலம், TN 23 N 2233 பதிவு எண் கொண்ட அரசு பேருந்தை இக்குற்ற அறிக்கையில் குறிப்பிட்டுள்ள எதிரியாகிய நீவிர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து லட்சுமி மீது மோதி விபத்து ஏற்படுத்தியதாகவும், விபத்தில் லட்சுமிக்கு தலையில் பின்புறம் பலத்த இரத்த காயமும், வலது கன்னத்தில் காயமும் ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே இறப்பு ஏற்பட காரணமாக இருந்தது என்று அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதால் எதிரியை குற்றவாளி என முடிவு செய்து அதிகபட்ச சிறைதண்டனையும், அபராதமும் விதிக்குமாறு வாதம் செய்தார்.

**7. கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞரின் வாதம்**

எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதத்தில் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி கண்ணுற்று சாட்சியை விசாரித்தபோதிலும் அவர் எதிரிதான் சம்பவத்தை ஏற்படுத்தினார் என்று எதிரியை அடையாளப்படுத்தவில்லை என்றும் நடந்த விபத்தில் TN 23 N 2233 பதிவு எண் கொண்ட அரசு பேருந்தை இக்குற்ற அறிக்கையில் குறிப்பிட்டுள்ள எதிரியாகிய நீவிர்

அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து லட்சுமி மீது மோதி விபத்து ஏற்படுத்தியதாகவும், விபத்தில் லட்சுமிக்கு தலையில் பின்புறம் பலத்த இரத்த காயமும், வலது கன்னத்தில் காயமும் ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே இறப்பு ஏற்பட காரணமாக இருந்தது என்று அரசு தரப்பில் திட்டவட்டமாக நிரூபிக்கப்படவில்லை என்றும் எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும் இறந்து போனவரின் குடும்பத்திற்கு விபத்து நஷ்டஈடு பெறுவதற்காக எதிரியின் மீது பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டானது சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படாததால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து இவ்வழக்கிலிருந்து விடுவித்து உத்தரவிடவேண்டுமென வாதம் செய்தார்.

8). இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டியது யாதெனில், அரசு தரப்பில் எதிரியின் மீது சுமத்தப்பட்ட குற்றமானது அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதுவேயாகும்.

9). இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. இவ்வழக்கில் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 101 ன் படி எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டினை நிரூபிக்கும்

பொறுப்பு அரசு தரப்பை சார்ந்ததாகும். விபத்தில் லட்சுமிக்கு தலையில் பின்புறம் பலத்த இரத்த காயமும், வலது கன்னத்தில் காயமும் ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே ஏற்பட்டுள்ளதா என்பது தான் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றமாகும்.

10). அ.சா.1, இவ்வழக்கின் புகார்தாரர் மற்றும் கேள்விபட்ட சாட்சி ஆவார். 12.07.2024 ம் தேதி மாலை 6.30 மணியளவில் தன் மனைவி கடைக்கு சென்றார். கிராணைட் கம்பெனி அருகே கண்டிபேடு என்ற இடத்தில் வரும்போது ஓரமாக அரசு பேருந்து தன் மனைவி மீது ரோட்டை கடந்து வரும்போது தடம் எண் 20 மோதியதாக தனது ஊரை சேர்ந்த தனது மகன் அசோகன் என்பவருக்கு தகவல் சொல்லி தன் மகன் தனக்கு தகவல் சொன்னார். சம்பவ இடத்திற்கு தானும் தனது மகனும் சென்று பார்த்தோம். தன் மனைவிக்கு காதில் இரத்தம் வழிந்து கொண்டிருந்தது. இறந்த நிலையில் காணப்பட்டார் சுய நினைவு இல்லை. வலது பக்க காது ஓரம் அடிப்பட்டு இரத்தம் வழிந்துகொண்டிருந்தது. கன்னத்தில் சிராய்ப்பு காயம் காணப்பட்டது. பின்னர் தன் மனைவி மீட்டு ஆம்புலன்ஸ் மூலமாக வேலூர் அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அங்கிருந்த மருத்துவர்கள் பரிசோதித்து விட்டு தனது மனைவி ஏற்கனவே இறந்து விட்டதாக தகவல் சொன்னார்கள். சம்பவம் தொடர்பாக தான் சொல்ல சொல்ல தனது அக்கா மகன்

புகார் எழுதினார். தன்னிடம் காட்டப்படும் புகார் மனு தன்னுடையது தான். அது அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. விபத்தை அணைக்கட்டை சேர்ந்த சுந்தர் என்ற டிரைவர் ஏற்படுத்தியதாக தெரிந்து கொண்டேன். போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

11). அ.சா.2 இவ்வழக்கின் கேள்விபட்ட சாட்சி ஆவார். கடந்த 12.07.2024 ம் தேதி தான் தன் வீட்டில் இருந்தபோது தங்கள் ஊரை சேர்ந்த மனோகர் என்பவரின் மகன் போன் மூலமாக தனது அம்மாவிற்கு 20 நம்பர் பேருந்து மோதி விபத்து நடந்ததாக தகவல் சொன்னார். சம்பவ இடம் கிராணைட் கம்பெனி அமைந்துள்ள கண்டிபேடு இடமாகும். சம்பவ இடத்திற்கு தானும் தனது தந்தை சுந்தரமூர்த்தியும் பார்த்தோம். தன் அம்மாவை சென்று பார்த்தபோது வலதுபக்க நெற்றியிலும், முகத்திலும், அடிப்பட்டு இருந்தது. இறந்த நிலையில் காணப்பட்டார். தனது அம்மாவை ஆம்புலன்ஸ் மூலமாக வேலூர் அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். மருத்துவர்கள் பரிசோதித்து விட்டு தனது அம்மா இறந்துவிட்டதாக தகவல் சொன்னார்கள். சம்பவம் தொடர்பாக நடவடிக்கை எடுக்க தனது அப்பா புகார் கொடுத்தார். போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

12). அ.சா.3 பிறழ்சாட்சி ஆவார் வழக்கு பற்றி தனக்கு ஏதும் தெரியாது. போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும்,

சாட்சியம் அளித்துள்ளார்.

13). அ.சா. 4 கண்ணுற்ற சாட்சி ஆவார். அ.சா.4 தனது சாட்சியத்தில் கடந்த 12.07.2024 ம் தேதி 6.25 மணிக்கு சேர்க்காடு கூட்டுரோடு செல்வதற்காக வளைவு அருகே செல்லும் போது அரசு கிரணைட் கம்பெனி பேருந்து மோதி விபத்து ஏற்பட்டது. சென்று பார்த்த போது லட்சுமி என்பவருக்கு தலையில் காயம் ஏற்பட்டு இருந்தது. அந்த பேருந்து வேலூர் முதல் பொன்னை செல்ல கூடிய 20R ஆகும். விபத்து ஏற்பட்டவுடன் பேருந்தின் ஓட்டுநர் இறங்கி வந்து அந்த லட்சுமி என்பவரை பார்த்தார். அந்த ஓட்டுநர் நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ளார். பின்னர் லட்சுமி என்பவரை ஆம்புலன்ஸில் ஏத்தி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

14) அ.சா. 5 பார்வை மகஜர் சாட்சி ஆவார். அ.சா.5 தனது சாட்சியத்தில் தற்போது தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் முதலாவது கையொப்பம் தன்னுடையது தான். அந்த கையொப்பத்தை அரசு பேருந்து மோதி விபத்து ஏற்பட்ட வழக்கு சம்மந்தமாக 13.07.2024 ம் தேதி கண்டிப்பேடு கம்மவார் புதூர் என்ற இடத்தில் வைத்து செய்து கொடுத்தேன். தன்னுடன் சசி என்பவரும் கையொப்பம் செய்தார். போலிசார் சம்பவ இடத்தில் மார்க் செய்து வைத்திருந்தார்கள். போலிசார் தன்னை

விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

15). அ.சா.6 இவ்வழக்கின் விசாரணை அதிகாரி ஆவார். அவர் தனது சாட்சியத்தில் புகார்தாரரின் புகார் வாக்குமூலத்தை பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தததைப் பற்றியும், சம்பவம் இடம் சென்று மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்ததை பற்றியும் இறந்த நபர்களுக்கு பிரேத விசாரணை செய்தததை பற்றியும், மோட்டார் சான்று பெற்று அவரிடம் விசாரணை செய்ததை பற்றியும், இறந்த நபருக்கு உடற்கூறாய்வு செய்ததைப் பற்றியும், பிரேத விசாரணை செய்து அறிக்கை தயார் செய்தது பற்றியும் இறுதியாக இறுதி அறிக்கை தாக்கல் செய்ததை பற்றியும் தாக்கல் செய்துள்ளார். அவரது சாட்சியம் வழக்கு விசாரணைக்கு ஒத்தியதே ஆகும்.

16). அ.சா.1 இவ்வழக்கின் புகார்தாரர் மற்றும் கேள்விபட்ட சாட்சி ஆவார். அ.சா.2 கேள்விபட்ட சாட்சி என்ற அடிப்படையிலும், . அ.சா.3 பிறழ் சாட்சி என்ற அடிப்படையிலும், அ.சா.4 கண்ணுற்ற சாட்சியாக இருந்தபோதிலும் குறுக்கு விசாரணையில் இறந்த நபர் மனநலம் பாதிக்கபட்டவர் என்றும், மெதுவாக செல்லும்போது இறந்த நபர் திடீரென குறுக்கே வந்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.5 மகஜர் சாட்சி என்ற அடிப்படையிலும், அ.சா.6 புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை மட்டுமே வைத்து எதிரி மீதான குற்றத்தை நிரூப்பிக்கப்பட இயலவில்லை.

17). இந்த வழக்கில் விபத்தை நேரிடையாக பார்த்த கண்ணுற்ற சாட்சியும், எதிரியை அடையாளப்படுத்தி சாட்சியம் அளிக்கவில்லை. அது மட்டுமல்லாது எதிரியை யாரும் அடையாளம் காட்டி எதிரிதான் அந்த விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் ஓட்டுனராக இருந்தார் என்றும், மேற்படி இக்குற்ற அறிக்கையில் குறிப்பிட்டுள்ள TN 23 N 2233 பதிவு எண் கொண்ட அரசு பேருந்தை இக்குற்ற அறிக்கையில் குறிப்பிட்டுள்ள எதிரியாகிய நீவிர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து லட்சுமி மீது மோதி விபத்து ஏற்படுத்தியதாகவும், விபத்தில் லட்சுமிக்கு தலையில் பின்புறம் பலத்த இரத்த காயமும், வலது கன்னத்தில் காயமும் ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே இறப்பு ஏற்பட காரணமாக இருந்தது என்று அரசு தரப்பு சாட்சிகள் யாரும் வலியுறுத்தி சாட்சியம் அளிக்கவில்லை. புலன் விசாரணை செய்த விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை மட்டும் வைத்து எதிரியின் மீதான குற்றச்சாட்டு அரசு தரப்பில் மெய்ப்பிக்கப்பட்டுவிட்டதாக யூகித்துக் கொள்ள இயலவில்லை. எனவே, மேலே கண்ட காரணங்களினால் அரசு தரப்பு வழக்கில் எழும் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து, எதிரியை விடுதலை செய்து தீர்ப்பு அளிப்பது நீதி நலனுக்கு உகந்தது என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது.

18). முடிவாக எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 281, 106(1) BNS –ன் கீழ் குற்றவாளி இல்லை என தீர்மானித்து எதிரியை கு.வி.மு.ச. 255(1) பிரிவின் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு பின் என்னால் பிழைகள் நீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026ம் ஆண்டு ஜூலை மாதம் 02 ம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய இத்தீர்ப்பு என்னால் பகரப்பட்டது.

S K P DILIP BABU Digitally signed by S K P DILIP BABU

நீதித்துறை நடுவர்,
காட்பாடி.

**அரசு தரப்பு சாட்சிகள்**

| வ.எண் | சாட்சிகளின் விபரம் |
|---|---|
| அ.சா.1 | சுந்தரமூர்த்தி |
| அ.சா.2 | அசோகன் |
| அ.சா.3 | மகேஷ் |
| அ.சா.4 | ரமேஷ் |

| | |
|---|---|
| அ.சா.5 | ரஞ்சித்குமார் |
| அ.சா.6 | பாலவெங்கட்ராமன் (விசாரணை அதிகாரி) |

**அரசுதரப்பு சான்றாவணங்கள்**

| | |
|---|---|
| அ.சா.ஆ.1 | புகார் மனு |
| அ.சா.ஆ.2 | பார்வை மகஜரில் முதலாவது உள்ள கையொப்பம் |
| அ.சா.ஆ.3 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.5 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.6 | பிரேத விசாரணை அறிக்கை |
| அ.சா.ஆ.7 | உடற்கூறாய்வு சான்று |
| அ.சா.ஆ.8 | மோட்டார் வாகன ஆய்வறிக்கை (TN 23 N2233) |

எதிரிகள் தரப்பு சாட்சி : இல்லை

எதிரிகள் தரப்பு சான்றாவணங்கள் : இல்லை

சான்று பொருட்கள் : இல்லை

**<u>குறிப்பு</u>**

1. வழக்கின் முடிவு சம்பந்தப்பட்ட காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

2. எந்த ஒரு சாட்சியும் 3 தினங்களுக்கு மேல்நிறுத்தி விசாரிக்கப்படவில்லை.

3. விசாரணை காலத்தில் எதிரிகள் காவல்நிலைய பிணையில் இருந்தார்.

S K P DILIP BABU — Digitally signed by S K P DILIP BABU

நீதித்துறை நடுவர்,
காட்பாடி.